வெங்கடாபுரம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு. G.K. ராஜா B.A.,

ந.க.எண்: 01/2023-2024

நாள்: 28.07.2023

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை வெங்கடாபுரம் ஊராட்சி/ பையனப்பள்ளி வருவாய் கிராம சர்வே எண்: 186/1A1B (ம) 186/9-ல் 0.36.00 ஹெக்டேர் (அ) (3600.00 ச.மீ) பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு - கிருஷ்ணகிரி நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் தொழில் நுட்ப அனுமதி வழங்கியது - இறுதி ஒப்புதல் வழங்கி - உத்தரவிடுதல்.

பார்வை : 1. அரசாணை எண்: 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.4(3)த் துறை, நாள்: 04.05.2017.

2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கிருஷ்ணகிரி மாவட்டம், அவர்களின் கடிதம் ந.க.எண்: 578/2023/கி.மா, நாள்: 04.04.2023 மற்றும் 26.09.2023

3. கிருஷ்ணகிரி நெ.2 இணை சார்பதிவாளர் அலுவலக பத்திர எண்: 1/4667, நாள்: 31.10.2022.

4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட ந.க.எண்: 01/2023-2024, நாள்: 28.07.2023.

5. வெங்கடாபுரம் ஊராட்சி தீர்மான் எண்: 03, நாள்: 28.07.2023.

6. திரு.ஆமீர்சுகேல், கிருஷ்ணகிரி என்பவரது விண்ணப்பம் நாள்:24.07.2023.

<<<<O>>>>

உத்தரவு:-

கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், வெங்கடாபுரம் ஊராட்சி/ பையனப்பள்ளி வருவாய் கிராம சர்வே எண்: 186/1A1B (ம) 186/9-ல் 36.00 ஹெக்டேர் (அ) (3600.00 ச.மீ) பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ம.வ/ந/ஊ/து.இ(கி.மா) எண்.105/2022 என எண்ணிட்டு - கிருஷ்ணகிரி நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் தொழில் நுட்ப அனுமதி பார்வை 2-ல் காணும் கடிதத்தின்படி வழங்கப்பட்டது.

மேற்படி மனைப்ரிவினை வரன் முறைப்படுத்திட உள்ளாட்சி நிர்வாகத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டிய சாலைகள் மற்றும் காலியிடம் ஆகியவற்றை நிர்ணயம் செய்து அவற்றை ஒப்படைக்கவும் துணை இயக்குநர், தமிழ்நாடு அரசு நகர் ஊரமைப்பு துறை, கிருஷ்ணகிரி மண்டலம் அவர்களால் பார்வை 2-ல் காணும் உத்தரவில் தெரிவிக்கப்பட்டது.

மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் ஊராட்சிக்கான இடம் ஆகியவை மனுதார்களால் கிருஷ்ணகிரி சார் பதிவாளர்- 2 அலுவலகத்தில் ஆவண எண்: 4667/2022, நாள்: 31.10.2022 அன்று வெங்கடாபுரம் ஊராட்சி மன்ற தலைவர் பெயரில் தானப்பத்திரம் செய்து ஒப்படைக்கப்பட்டது.

பார்வை 1-ல் காணும் அரசாணை எண் 79-ன்படி நிலப்பயன் மாற்றக் கட்டணம் மனையிடப் பரப்பின் சந்தை மதிப்பீட்டில் (market value) 3% ரூ.1,10,000/- (ரூபாய் ஒரு லட்சத்து பத்தாயிரம் மட்டும்) 18.07.2023-ஆம் தேதியில் இணையதள வாயிலாக உரிய அரசு தலைப்பிலும், ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய கூராய்வு கட்டணம் ரூ.19,000/-(ரூ. 1000/-வீதம் 19 மனைகளுக்கு) 26.07.2023-ல் ஊராட்சியிலும் செலுத்தப்பட்டது.

மேலும் சென்டேஜ் கட்டணம் ரூ.1,10,000/-(ஒரு லட்சத்து பத்தாயிரம் மட்டும்), நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கிருஷ்ணகிரி அவர்களால் உரிய அரச தலைப்பிலும் வசூலிக்கப்பட்டுள்ளது.

வெங்கடாபுரம் ஊராட்சி தீர்மான எண்: 03, நாள்: 28.07.2023-ன்படி, புதிய வீட்டு மனைப்பிரிவு அமைத்திட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம் வெங்கடாபுரம் ஊராட்சி/ பையனப்பள்ளி வருவாய் கிராம சர்வே எண்: 186/1A1B (ம) 186/9-ல் 0.36.00 ஹெக்டேர் (அ) (3600.00 ச.மீ) பரப்பளவில் வரைபடத்தில் உள்ளவாறு அமைக்கப்பட்டுள்ள 19 குடியிருப்பு மனைகளுக்கு மட்டும் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்து இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள் நீர்நிலைகள், அரசு புறம்போக்கு, திறந்தவெளி ஒதுக்கீடு, அடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் காலிமனை, உத்தேச சாலை மற்றும் rail corridors, பொது பாதை மற்றும் நில உச்சவரம்பு சட்டத்தின்படி உள்ள மனையிடம், அதிக னயர்மின்னழுத்த பாதை கீழ் அமைந்திருக்க கூடாது.
2. தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. இம்மனைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையாளர் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பித்த வில்லங்க சான்றின் சரித்தன்மையை துணை இயக்குநர், தமிழ் நாடு அரசு நகர் ஊரமைப்பு துறை, கிருஷ்ணகிரி மண்டலம் அவர்களின் பார்வை 2-ல் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு முறைப்படுத்தப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரித்தன்மை குறித்து புகார்கள் கண்டறியப்படின் ஒட்டு மொத்த மனைப்பிரிவின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
4. முனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் வெங்கடாபுரம் ஊராட்சியின் தலைவர் அவர்களிடம் கட்டிட அனுமதி பெறப்பட வேண்டும்.
5. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் உத்தரவு எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
6. இம்மனைபிரிவின் நிலங்கள் தொடர்பாக நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் இருந்து தீர்ப்பு எதிராக வரப்பெறின் இறுதி ஒப்புதல் வழங்கிய உத்தரவு இரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. தொழில்நுட்ப அனுமதி வழங்கிட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கிருஷ்ணகிரி மண்டலம் அவர்களின் கடிதத்துடன் அளிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளும் பொருந்தும்.

28/07/2023

PRESIDENT
Venkatapuram Panchayat
Krishnagiri Union

ஊராட்சி மன்ற தலைவர்
வெங்கடாபுரம் ஊராட்சி

பெறுதல்:

திரு. N. அமீர் சுஹேல்
த/பெ திரு.S.K. நவாப்,
க.எண் 2/12, ஜைனுலாபுதீன் தெரு,
பழையபேட்டை, கிருஷ்ணகிரி.

நகல்:

1. துணை இயக்குநர், கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஓசூர் தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
2. நெ .2 இணைசார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கிருஷ்ணகிரி.